கல்குடா கல்வி வலய,இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான
க.பொ.த. உயர்தரம் செயலட்டை:01

இந்து நாகரிகம் – இந்துசமயம்

பல்தேர்வு வினா விடை

'சைவப் புலவர்' 'இந்து தர்மாசிரியர்'

திருமதி. ஸோபா ஜெயரஞ்சித்

B.A. (Hons), Dip. in.Edu.(NIE), Dip.in.Office Administration (First class), Dip.in.Tamil(**ஊழடழஅடிழ** Tamil sangam),
Dip.in.Tamil(UOP),Dip.in.School Management(Merit Pass),

மட்/ககு - பேத்தாழை விபுலானந்தாக் கல்லூரி, வாழைச்சேனை.

அலகு : வேதங்கள்

அறிவுறுத்தல்கள்:

* எல்லா வினாக்களுக்கும் விடை அளிக்குக.
* 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் (1),(2),(3),(4),(5) என எண்ணிடப்பட்டுள்ள விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.

---

1. மூவகை வித்தை என்ற பொருளில் வரும் திரயீவித்யா என்ற சொல் குறிப்பது.
   1. உபநிடதம், பிரம்மசூத்திரம், பகவத்கீதை
   2. இருக்கு, யசுர், சாமம்
   3. இதிகாசம், புராணம், தர்மசாஸ்திரம்
   4. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா
   5. வில்வித்தை, மல்வித்தை, சொல்வித்தை
2. அரசர்களின் நன்மை கருதி செய்யப்படும் ராஜகர்மாணி என்னும் கிரியை பற்றிக் கூறுவது.
   1. இருக்கு 2. யசுர் 3. சாமம் 4. அதர்வம் 5. மகாபாரதம்
3. வேதத்தில் அறக்கடவுளாகக் கூறப்படுபவர்.
   1. யமன் 2. மித்திரன் 3. வருணன் 4. இந்திரன் 5. உருத்திரன்
4. வேதகாலத்து ரிஷிகளின் பெயர்கள் அடங்கிய தொகுதி.
   1. அகஸ்தியர், பரசுராமர், வாமதேவர், ஜமதக்கினி
   2. அத்திரி,அகஸ்தியர்,வசிஷ்டர், விஸ்வாமித்திரர்
   3. பரசுராமர், பராசரர், அகஸ்தியர், வசிஷ்டர்
   4. வாமதேவர்,வசிஷ்டர், புலஸ்தியர், ஜமதக்கினி
   5. கௌதமர், போதாயனர், விஸ்வாமித்திரர், புலஸ்தியர்
5. வேதப்பாடல்களில் கூறப்படும் தேவர்கள்.
   1. வருணன், சூரியன், மித்திரன், முருகன், சிவன்
   2. இந்திரன், வருணன், உஷை, கௌரி, காளி
   3. விநாயகர், உருத்திரன், விஸ்ணு, நாராயணன், பைரவர்
   4. சூரியன், உருத்திரன், அக்கினி, வருணன், இந்திரன்
   5. குமாரக்கடவுள், கணேசர், உருத்திரன், வருணன், கொற்றவை
6. இருக்குவேத மண்டலங்களின் எண்ணிக்கை.
   1. 7 2. 10 3. 12 4. 8 5. 11
7. இயற்கை ஒழுங்கை கண்காணிக்கும் தெய்வமாக இருக்குவேதத்தில் சிறப்பாக கூறப்படுபவன்.
   1. அக்கினி 2. உருத்திரன் 3. சோமன் 4. வருணன் 5. மித்திரன்
8. அவைதிக சமயங்கள் எனச்சுட்டப்படுபவை?
   1. வேதத்தை ஏற்று ஆகமத்தை ஏற்காதவை
   2. வேதத்தை அவ்வப்போது ஏற்றுக் கொள்பவை
   3. ஆகமத்தை மாத்திரம் ஏற்றுக்கொள்பவை
   4. வேதத்தை ஏற்றுக் கொள்ளாதவை
   5. வேதத்தை மட்டும் ஏற்றுக் கொள்பவை

www.ke0.lk

9. இருக்கு வேதத்திலுள்ள நான்கு சூத்திரங்கள் அடங்கும் தொகுதி.
   1. வருணசூக்தம், யமசூக்தம், விஸ்ணு சூக்தம், புருஷ சூக்தம்
   2. நாசதீய சூக்தம், புருஷ சூக்தம், விஷமசூக்தம், யமசூக்தம்
   3. வருணசூக்தம், யமசூக்தம், நாசதீய சூக்தம், புருஷ சூக்தம்
   4. துரோணசூக்தம், யமசூக்தம், வருணசூக்தம், புருஷசூக்தம்
   5. துரோணசூக்தம், விஷமசூக்தம், விஸ்ணுசூக்தம், வருணசூக்தம்

10. வேதகால சமய மரபில் விண்ணுக்குரிய தெய்வங்கள் அடங்கும் தொகுதி.
   1. மித்திரன், வருணன், விஸ்ணு
   2. மித்திரன், வருணன், இந்திரன்
   3. மித்திரன், வருணன், வாயு
   4. மித்திரன், அக்கினி, விஸ்ணு
   5. மித்திரன், உருத்திரன், இந்திரன்

11. வேதகாலச் சோதிடக்கலை பற்றி அறிவதற்கு உதவும் நூல்.
   1. நிதான சூத்திரம் 2. நிகண்டு 3. நைடதம் 4. ஜ்யோதிஸ வேதாங்கம் 5. சர்வாநுக்கிரமணி

12. வேதகாலத்தில் போர்க்கடவுளாகச் சிறப்பிக்கப்படும் தெய்வம்.
   1. சூரியன் 2. வருணன் 3. இந்திரன் 4. அக்கினி 5. உருத்திரன்

13. வேதத்தில் 'விருத்திரகா' எனப் போற்றப்படும் தெய்வம்.
   1. யமன் 2. மித்திரன் 3. வருணன் 4. இந்திரன் 5. பிரகஸ்பதி

14. வேதங்களுக்கு வழங்கும் வேறு பெயர்களைக் கொண்ட தொகுதி.
   1. கோபதம், அபௌருஷேயம், சுருதி, நாஸதீயம், மறை
   2. சுருதி, மறை, சுயம்பு, ஆம்நாயம், அபௌருஷேயம்
   3. ஆரணியம், நாஸதீயம், சுருதி, மறை, நிகண்டு
   4. அபௌருஷேயம், ஆபஸ்தம்பம், பரசுருதி, சுயம்பு, எழுதாமறை
   5. சுயம்பு, மறை, எழுதாக்கிளவி, நாஸதீயம், ஆக்ஞேயம்

15. வேதமரபுகள் வளர்ந்த பண்பாட்டு நிலையங்களுள் ஒன்றாக விளங்கிய நகரம் எது?
   1. காசி 2. வச்சய 3. குரு 4. காந்தாரம் 5. அங்கதம்

16.'சதருத்திரயம்' போற்றித்துதிக்கும் தெய்வம்.
   1.அக்கினி 2.வருணன் 3.உருத்திரன் 4.கொற்றவை 5.விஸ்ணு

16. 'ரிதஸ்ய கோபா' எனக் குறிப்பிடப்படுபவர்.
   1. இந்திரன் 2. சோமன் 3. உருத்திரன் 4. வருணன் 5. சூரியன்

17. பெண்களின் நன்மை, தீமை கருதிச் செய்யப்படும் அதர்வ வேதக் கிரியை.
   1. போஜயானி 2. பௌஷ்டிகானி 3. ஸ்திரிகர்மானி 4. ராஜகர்மாணி 5. ஸ்திரிஹோமம்

18. வேதத்தின் கர்மகாண்டப் பகுதியைச் சார்ந்தவை.
   1. ஆரணியகம், உபநிடதம்
   2. சாமம், அதர்வம்
   3. வாயு, இந்திரன்
   4. இருக்கு, யசுர்
   5. சங்கிதை, பிரமாணம்

19. சாம வேதத்தின் இரு பிரிவுகள்.
   1. பூர்வ ஆர்ச்சிகம், உத்தர ஆர்ச்சிகம்
   2. கிருஸ்ண யசுர், சுக்கில யசுர்
   3. பூர்வ ஆர்ச்சிகம், கிருஸ்ண யசுர்
   4. சுக்கில யசுர், உத்தர ஆர்ச்சிகம்
   5. சங்கிதை, சுக்கில யசுர்

20. இருக்குவேதப் பிரமாணங்கள்.
   1. தைத்திரீயப் பிரமாணம், சதபதப் பிரமாணம்
   2. ஐதரேயப் பிரமாணம்
   3. சதபதம், ஐதரேயம்
   4. தாண்டயம், சாந்தோக்கியம்
   5. கோபதப்பிரமாணம், ஐதரேயம்

www.kedu.lk

21. பத்து மண்டலங்களையும் ஆயிரத்து இருபத்தெட்டு சூக்தங்களையும் கொண்ட வேதம்.
1. இருக்கு 2. யசுர் 3. சாமம் 4. அதர்வணம் 5. ஆயர்வேதம்

22. இறைவனுக்கு அஷ்டோத்திர நாமம் சொல்லியும், சகஸ்ரநாமம் சொல்லியும் அர்ச்சனை செய்யும் வழக்கத்திற்கு வழிவகுத்த வேதம்.
1. இருக்கு 2. யசுர் 3. சாமம் 4. அதர்வம் 5. வேதாந்தம்

23. வேதகாலத்தில் மண்ணுக்குரிய தெய்வங்களாகப் போற்றப்பட்ட தெய்வங்கள் அடங்கிய தொகுதி.
1. பிருதுவி, வருணன், விஸ்ணு, சோமன் 2. பிருதுவி, பிருகஸ்பதி, அக்கினி,சோமன்
3. இந்திரன், பர்ஜன்யன், வாயு, வருணன் 4. உஷை, அஷ்வினிதேவர், இந்திரன், வாயு
5. அக்கினி, சோமன், விஸ்ணு, உஷை

24. வேதகால நதிகள் அடங்கும் தொகுதி.
1. சிந்து, வியாட், சதுத்ரி, சரஸ்வதி 2. கங்கா, யமுனை, கோதாவரி, சரஸ்வதி
3. சிந்து, காவேரி, கன்னியாகுமரி, நர்மதா 4. யமுனை, சிந்து, நர்மதா, சதுத்ரீ
5. சிந்து, பாலாவி, காவேரி, வைகை

25. 'ஏகம்சத்' சத்தியமான பொருள் ஒன்றே என்ற தத்துவக் கருத்தை முதன்முதலாகக் குறிப்பிடுவது.
1. இருக்கு வேதம் 2. மகாபாரதம் 3. இலிங்க புராணம் 4. சாம வேதம் 5. இராமாயணம்

26. அரசர்களின் நன்மை கருதிச் செய்யப்படும் 'ராஜகர்மாணி' என்னும் கிரியை பற்றிக் கூறுவது.
1. இருக்கு வேதம் 2. யசுர் வேதம் 3. சாமவேதம்4. அதர்வ வேதம் 5. மகாபாரதம்

27. வேதத்தின் ஞானகாண்டப் பகுதியில் அடங்குபவை.
1. சங்கிதை, பிரமாணங்கள் 2. சங்கிதைகள், உபநிடதங்கள் 3. பிரமாணங்கள், ஆரணியங்கள்
4. ஆரணியங்கள், சங்கிதைகள் 5. ஆரணியங்கள், உபநிடதங்கள்

28. வேதம், ஆகமம் இரண்டுமே இறைவன் நூல் எனத் தமிழில் எடுத்துக் கூறியவர்.
1. திருமூலர் 2. அருணகிரிநாதர் 3. மாணிக்கவாசகர் 4. தாயுமானவர் 5. சம்பந்தர்

29. வேதகால மக்களால் வழிபட்ட பெண் தெய்வங்கள் அடங்கும் தொகுதி.
1. உஷை, பிருதுவி, கங்கை, ராத்திரி 2. இந்திரன், வருணன், சூரியன், வாயு
3. சரஸ்வதி, ராத்திரி, பிருதுவி, கங்கை 4. உஷை, சிந்து, ராத்திரி, கங்கை
5. உஷை, சக்தி, சரஸ்வதி, இலக்குமி

30. வேதகால வேள்வி வழிபாட்டில் முக்கிய இடத்தினைப் பெறும் தெய்வங்கள்.
1. மித்திரன், வருணன், வாயு 2. புரோகிதன், அக்கினி, பகவான், சோமன்
3. இந்திரன், உருத்திரன், மித்திரன் 4. மித்திரன், அக்கினி, விஸ்ணு
5. வாயு, சோமன், மித்திரன்

31. இருக்கு, யசுர், சாமம் ஆகிய மூன்றுக்கும் உரிய பிரமாணங்கள் அடங்கிய தொகுதி.
1. ஐதரேயம், சதபதம், சட்விட்சம் 2. சாந்தோக்கியம், ஐதரேயம், சதபதம்
3. சதபதம், ஐதரேயம், பிருகதாரணியம் 4. சதபதம், கடம், சுவேதாஸ்வரம்
5. கடம், அதர்வம், சதபதம்

32. 'வேதங்களில் வேதம் ஏக' என அழைக்கப்படுவது.
1. இரட்சை 2. வியாகரணம் 3. நிருக்தம 4. சோதிடம் 5. கல்பம்

33. வேதங்கள் 'அபௌருஷேயம்'என அழைக்கப்படுவதன் காரணம்.
1. அவற்றை ரிஷிகள் இயற்றியதால் 2. இந்துமத முதல்நூல் என்பதால்
3. இறைவன் நூல் என்பதால் 4. கவிஞர்கள் பாடியதால்
5. புலவர்கள் பாடியதால்

34. இருக்குவேதம் குறிப்பிடும் மருத்துவ சூக்தம்.
1. ஔசதி சூக்தம் 2. யம சூக்தம் 3. வருண சூக்தம் 4. புருஷ சூக்தம் 5. நாசதீய சூக்தம்

www.tesu.lk

35. இருக்குவேதத்தில் மருந்துகளுடன் தொடர்புடையவர்களாகப் போற்றப்படும் தேவர்.

1. அஸ்வினி 2. யமன் 3. பூசன் 4. வருணன் 5. உஷை

36. வேதங்களின் எழுத்து, சொல், பொருள் ஆகிய இலக்கணங்களை கூறும் பகுதி.

1. சிட்சை 2. வியாகரணம் 3. சோதிடம் 4. கல்பம் 5. சந்தம்

37. வேதங்களை உச்சரிக்கும் முறை பற்றி கூறும் வேதாங்கம்.

1. நிருக்தம் 2. சிட்சை 3. வியாகரணம் 4. சந்தோவிசிதி 5. சோதிடம்

38. இருக்குவேத சூக்தங்களின் எண்ணிக்கை.

1. 108 2. 18 3. 1028 4. 10028 5. 1018

40. 'மருந்துக்களின் தந்தை'எனப்போற்றப்படும் கடவுள்.

1. இந்திரன் 2. வருணன் 3. உருத்திரன் 4. சோமன் 5. அக்கினி

39. 'சைவ வேதம்' எனப் போற்றப்படுவது.

1. இருக்கு வேதம் 2. யசுர் வேதம் 3. அதர்வண வேதம் 4. சாம வேதம் 5. திராவிட வேதம்

40. வேத அத்தியயனம் என்பது.

1. புராதன அரசியல் முறை 2. புராதன கல்வி முறை 3. புராதன திருமண முறை
4. புராதன ஆச்சிரம தர்மம் 5. புராதன பொருளாதார முறை

41. "தூய்மையான இறைவனைத் தூய பாடல்களால் போற்றுவோமாக" எனக் கூறும் வேதம்.

1. யசுர் வேதம் 2. சாம வேதம் 3. இருக்கு வேதம் 4. அதர்வண வேதம் 5. உபநிடதம்

42. யசுர் வேதத்தின் சாகைகள்.

1. 101 2. 10 3. 20 4. 12 5. 1028

43. 'புவனத்தின் பிதாவானவன்'என்று போற்றப்படும் வேதகாலத் தேவர்.

1. இந்திரன் 2. வருணன் 3. உருத்திரன் 4. பிரகஸ்பதி 5. சூரியன்

44. வேதகாலத்தில் செல்வத்தை நிர்ணயிக்க உதவியது.

1. பணம் 2. காணிவளவு 3. பசுக்கள் 4. தங்கம் 5. பாத்திரங்கள்

45. வேதங்களின் நான்கு பகுதிகளாவன.

1. சங்கிதை, பிராமணம், ஆரணியம், உபநிடதம்
2. சங்கிதை, சனற்குமாரசங்கிதை, ஐதரேய பிரமாணம், கடோபநிடதம்
3. பிரமாணம், ஆரணியம், உபநிடதம், வேதாங்கம், வேதாந்தம்
4. பிரமாணம், ஆரணியம், கடோபநிடதம், வேதாந்தம்
5. சங்கிதை, பிராமணம், உபவேதம், உபநிடதம்

46. இந்து சமூக நன்மைக்காகப் பிரயோகிக்கப்படும் 'பௌஷ்டிகானி' என்னும் மந்திரங்களை கொண்ட வேதம்.

1. இருக்கு 2. யசுர் 3. சாமம் 4. அதர்வம் 5. பகவத்கீதை

47. மக்கள் கடைப்பிடிக்கும் நேர்மையையும் இயற்கை ஒழுங்கையும் கண்காணிக்கும் தெய்வமாக இருக்கு வேதத்தில் சிறப்பாக போற்றப்படுபவன்.

1. வருணன் 2. அக்கினி 3 சோமன் 4. வியாசர் 5. உருத்திரன்

48. உழவனுக்கும் வர்த்தகனுக்கும் தம் கருமங்களில் சித்தியையும் இன்பத்தையும் அளிக்கும் அதர்வவேத மந்திரப் பகுதி.

1. பேசாஜானி 2. அபிஹாரணி 3. பௌஷ்டிகானி 4.ஆப்ரிசூத்திரம் 5. ரோகிதசூத்திரம்

50. இடையுலகைச் சார்ந்த தெய்வங்கள் அடங்கும் தொகுதி.

1. இந்திரன், உருத்திரன், வாயு 2. அக்கினி, இந்திரன், மழை 3. சூரியன், சோமன், வாயு
4. இந்திரன், இடி, வருணன் 5. இந்திரன், சோமன், பிரகஸ்பதி

(50×2=100 புள்ளிகள்)

www.ikeduk